செ.வெ.எண்: 06 நாள்:02.09.2021

**நாமக்கல் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பள்ளி மற்றும் கல்லூரிகள் திறப்பட்டுள்ளதையொட்டி, அரசின் நிலையான வழிகாட்டி நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

-----

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முள்ளுக்குறிச்சி, அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி மற்றும் மெட்டாலாவில் அமைந்துள்ள லயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அரசின் நிலையான வழிகாட்டி நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.09.2021) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளி மற்றும் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளதையொட்டி, அரசின் வழிகாட்டி நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையும், வகுப்பறைகள் கிருமி நாசினி கொண்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளதையும், போதிய இடைவெளியில் மாணவர்கள் அமர மேசைகள் அமைக்கப்பட்டுள்ளதையும், பள்ளி மற்றும் கல்லூரியில் அனைவரும் முகக்கவசம் அணிந்துள்ளதையும், பள்ளியில் மாணவர்களின் வருகை பதிவேடுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர், பள்ளியின் கழிப்பறை மற்றும் அடிப்படை வசதிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கழிப்பறை சுத்தமாக உள்ளதையும், போதிய தண்ணீர் வசதியுள்ளதையும் ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, முள்ளுக்குறிச்சி, அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி மாணவர் விடுதியில் சமையலறையை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சமையல் அறை சுத்தமாக உள்ளதையும், சமையல் செய்யும் பாத்திரங்கள் சுத்தமாக உள்ளதையும், உணவு தயாரிக்க பயன்படுத்தும் பொருட்களின் தரம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, சுத்தமான முறையில் உணவு தயார் செய்யப்படுவதை நேரில் பார்வையிட்டு, மாணவர்களுக்கு தயார் செய்யப்பட்ட மதிய உணவை உட்கொண்டு உணவின் தரத்தினை ஆய்வு செய்தார். பின்னர், ஆசிரியர்களிடம் விடுதியில் வாராந்திர உணவுப்பட்டியலின்படி, மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகின்றதா என்றும், விடுதியில் தங்கியுள்ள மாணவர்களின் உடல் நிலை மற்றும் ஆரோக்கியம் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

மேலும், அனைவரும் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை கட்டாயம் பின்பற்றுமாறும், 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டுமென்றும், பள்ளிக்கு வருகை தரும் அனைவரும் அரசின் வழிகாட்டிகளை பின்பற்றுமாறும், வெப்பமானி கொண்டு உடல் வெப்ப நிலையை பரிசோதிக்குமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, மெட்டாலா லயோலோ கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அரசின் வழிகாட்டி நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, கல்லூரி முதல்வரிடம் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்தியுள்ளார்களா என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளின் போது நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், இராசிபுரம் வட்டாட்சியர் திரு.ப.கார்த்திகேயன், நாமகிரிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சரவணன், திரு.சுந்தரம் உட்பட லயோலா கல்லூரி முதல்வர், பள்ளி ஆசிரியர்கள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

இணைப்பு: புகைப்படங்கள் 8 எண்ணிக்கை